செய்தி வெளியீடு எண்:92 நாள்:05.02.2021

<u>செய்திக் குறிப்பு</u>

# செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் அவர்கள் தலைமையில் அகரமுதலி இயக்ககத்தில் ‘‘ஊடகத்துறை வல்லுநர்கள்’’ கலந்தாய்வுக் கூட்டம்!

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் சார்பில் 06.02.2021 காரிக்கிழமையன்று சொற்குவைத் திட்டத்தின்கீழ் வல்லுநர்குழுக் கூட்டம் காலை 10.00 மணிமுதல் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் ஊடகத்துறை வல்லுநர்கள் 15 பேர் பங்கேற்கவுள்ளனர்.

இன்றைய கணினி உலகில் நாள்தோறும் பல புதிய புதிய துறைகள் தோன்றி அத்துறை சார்ந்த சொற்களும் உருவாகிவருகின்றன. அப்படி உருவாகும் சொற்களுக்கு உடனுக்குடன் தமிழில் கலைச்சொற்களை வடிவமைத்து, அவற்றை மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவரவேண்டும். அவ்வாறு செய்வதனால் மொழிக்கலப்புத் தவிர்க்கப்படுவதோடு, தமிழின் சொல்வளமும் பெருகும்.

அந்தந்தத் துறைசார்ந்தவர்களுக்கே அத்துறைகளில் அடிக்கடி பயன்படுத்தப்படும் சொற்களும், தமிழாக்கம் செய்யப்படவேண்டிய சொற்களும் நன்கு தெரியும் என்பதால், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் துறைசார்ந்த வல்லுநர் குழுக்கூட்டங்களை நடத்தவுள்ளது. மேலும், தமிழ்க் கலைச்சொல்லாக்கத்திற்கான தொடர் பணியில் வல்லுநர்களின் துறைசார் புலமையை இவ்வியக்ககம் தொடர்ந்து பயன்படுத்திக் கொள்ளவும் இத்தகைய வல்லுநர்குழுக் கூட்டங்கள் வாய்பாக அமையும் என்பது குறிப்பிடத்தக்கது.

அந்தவகையில், 06.02.2021 காரிக்கிழமையன்று காலை 10.00 மணியளவில் ஊடகத்துறை வல்லுநர் குழுக்கூட்டம் நடைபெறவுள்ளது. தமிழ்நாட்டிலுள்ள முன்னணி ஊடகத்துறையிலிருந்து 15வல்லுநர்கள் இக்கூட்டத்தில் பங்கேற்கிறார்கள். பட்டினப்பாக்கம் , எம்.ஆர்.சி.நகரிலுள்ள நகர் நிருவாக அலுவலக வளாகத்தின் முதல் தளத்தில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தினைத் செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு.தெ.பாஸ்கர பாண்டியன் இ.ஆ.ப., அவர்கள் தலைமைவகித்துத் தொடங்கிவைக்கவுள்ளார். அகரமுதலி இயக்கக இயக்குநர் திரு.தங்க.காமராசு அவர்கள் நோக்கவுரையாற்றுகிறார். திட்ட ஒருங்கிணைப்பாளர் திருமதி.ஜெ.சாந்தி நன்றியுரை கூறவுள்ளார்.

இயக்குநர்

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9